## தலைப்பு 222 - இலங்கை இராணுவம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இலங்கை இராணுவத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் படி, இலங்கை இராயுவத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கையொன்று 2020 யூன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் படி,கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 15 ஆம் திகதி கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி சமப்பிக்கப்பட வேண்டிய இவ் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை இராணுவத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே

விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை கடற்படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) இலங்கை இராணுவத்தினால் கடந்த வருடத்திற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தபட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக்கூற்றில் உயிரியல் சொத்துக்கள், கணனி மென்பொருட்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு உரியதாக ரூபா 468.62 மில்லியன் கூட்டுப் பெறுமதியுடைய சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கணக்கு வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள தீயணைக்கும் உபகரணங்களை ரூபா 5.291 மில்லியனுக்கு விற்பனை செய்தமையால் கிடைத்த வருமானத்தை சொத்துக்கள் கணக்கிற்கு செலவு வைத்தல் மற்றும் அதற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமையால் அந்த பெறுமதியால் சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆரம்ப மீதிகளை நிதிக்கூற்றுக்களில் சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (இ) | இராணுவத்திற்கு சொந்தமான 160 காணித் துண்டுகள் இது வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இராணுவத்திற்கு சொந்தமான காணிகளை துரிதமாக இனங்கண்டு மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். | மதிப்பீட்டு பணிகள் நிறைவடைந்த பின்னர் கணக்கு வைக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களினுள் ஏனைய சொத்துக்களாக ரூபா 2.590 மில்லியன் மற்றும் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் ஏனைய சொத்துக்களாக ரூபா 111.22 மில்லியன் தொகையும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பில் பட்டோலைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழான ஏனைய சொத்துக்களுக்காக விபரங்கள் தொடர்பான அறிக்கையொன்றினை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதாகவும், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழான ஏனைய சொத்துக்கள் பல வருடங்களாக ஆரம்ப மீதிகளாக முன்கொண்டுவரப்படும் பெறுமதியொன்றாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | ரனவிரு மாபிய ரெக்கவரண கொடுப்பனவை செலுத்தும் போது அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் mod/dev/rvsa/61/2012 ஆம் இலக்க மற்றும் 2012 யூலை 19 ஆந் திகதிய கடிதத்தில் பொது | கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் உயிரியல் தரவு அறிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். | கடிதத்தின் பொது நிபந்தனைகள் தொடர்பில் இராணுவத்தின் அனைத்து இடங்கள் அனைத்து படையணி தளங்களையும் அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும், உயிரியல் |

| | | |
|---|---|---|
| நிபந்தனை 07 இன் பிரகாரம் 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்காக மொத்த நலனாளிகளின் மற்றும் 2019 முதல் அரையாண்டின் நலனாளிகள் 122,699 பேரிடமிருந்து உயிரியல் தரவுகளைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 3,297.03 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | தரவு அறிக்கைகளை முன்வைக்காத நபர்களின் கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதற்குரிய அறிவுறுத்தல்களை பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை இராணுவத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணம் 66 மூலம் ரூபா 3,297.07 மில்லியன் 12 செலவின விடயங்களுக்காக நிதியேற்பாட்டில் மாற்றல்கள் இடம்பெற்றிருந்ததுடன், 04 சந்தர்ப்பங்களில் ரூபா 3,153.80 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிப்பட்டிருந்தது. | பாதீட்டு மதிப்பீடுகள் கூடியளவு துல்லியமானதாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்த தேவைப்பாட்டின் அடிப்படையில் குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் நி.பி. 66 இன் மூலம் நிதியேற்பாடுகள் மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | செலவின விடயங்களுக்கான நிதியேற்பாடு செயற்திறனாக கையாளப்பட்டிராமையால் நிதியேற்பாட்டில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. 10 சதவீதத்திற்கு மேற்பட்ட அவ்வாறான சேமிப்புகளுடனான 35 செலவின விடங்கள் நிலவியதுடன், அதன் பெறுமதி ரூபா 11,111.66 மில்லியன் ஆகும். | நிதியேற்பாடுகள் செயற்திறனாக கையாளப்பட வேண்டும். | 18 செலவின விடயங்களுக்காக கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு கொடுப்பனவு அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பொது திறைசேரியிடமிருந்து போதியளவான திரவத்தன்மையுடன் பணம் கிடைக்கவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | இந்திய கடன் திட்டத்தின் பிரகாரம், 2 செலவின விடய இலக்கத்திக் கீழ் ரூபா 1,500 மில்லியன் மற்றும் ரூபா 225 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த | திட்டமிட்டவாறு நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். | உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக பெறுகை நடவடிக்கைகளை ஒரு வருடத்தினுள் நிறைவு செய்ய முடியாதிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அந்த செலவின விடயங்களிலிருந்து ஆண்டினுள் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 07 செலவின விடயங்களுக்காக ரூபா 4,659.60 மில்லியன் நிதியேற்பாடு மற்றும் குறைநிரப்பு நிதியேற்பாடு ரூபா 604.70 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், மொத்த செலவினம் ரூபா 3,266.66 மில்லியனானமையால் மதிப்பிடப்பட்ட தொகையில் ரூபா 1,392.94 மில்லியன் சேமிப்பு காணப்பட்டதுடன், மொத்த குறைநிரப்பு நிதியேற்பாடான ரூபா 604.70 மில்லியனும் எஞ்சியிருந்தது. | நிதியேற்பாடுகளை வருடாந்த தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும் போது அதனை பயன்படுத்துவதற்காக மூலோபாயத் திட்டங்கள் உரிய காலத்தினுள் தயாரித்தல், உரிய காலத்தில் தயாரித்தல் மற்றும் பின்தொடர்தல். | திரவத்தன்மையுடைய பணத்தை போதியளவில் வழங்காமை காரணமாக பட்டியல்களை தீர்க்க முடியவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (உ) | பாகிஸ்தான் கடன் திட்டத்தின் கீழ் செலவிட விடயம் இலக்கம் 2 இன் கீழ் 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு நிதியேற்பாட்டின் மூலம் முறையே ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், முறையே அவற்றில் ரூபா 84.80 மில்லியன் மற்றும் ரூபா 29.76 மில்லியன் அல்லது 42.40 சதவீதம் மற்றும் 99 சதவீதம் எஞ்சியிருந்தது. | நிதியேற்பாடுகளை வருடாந்த தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும் போது அதனை பயன்படுத்துவதற்காக மூலோபாயத் திட்டங்கள் உரிய காலத்தினுள் தயாரித்தல், உரிய காலத்தில் தயாரித்தல் மற்றும் பின்தொடர்தல். | பின்தொடர்தல் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், பணத்தை விடுவிப்பதற்கு பாகிஸ்தான் வங்கியால் உறுதிப்படுத்தவில்லை என்பதால் நிதியேற்பாடு எஞ்சியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்படாத செலவின விடயமொன்றிற்காக ரூபா 100 மில்லியனான குறைநிரப்பு மதிப்பீடு மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியளவில் ரூபா 97.04 மில்லியன் அல்லது 97.04 சதவீதமும் எஞ்சியிருந்தது. | நிதியேற்பாடுகளை வருடாந்த தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும் போது அதனை பயன்படுத்துவதற்காக மூலோபாயத் திட்டங்கள் உரிய காலத்தினுள் தயாரித்தல், உரிய காலத்தில் தயாரித்தல் மற்றும் பின்தொடர்தல். | பிரதேச செயலகத்தினால் போதியளவான எண்ணிக்கையிலான மாணவர்களை பங்குபற்றச் செய்ய தவறியுள்ளதாகவும், திரவத்தன்மையுடைய பணம் போதியளவில் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.2 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்குரிய 2019 திசெம்பர் 31 ஆந திகதியில் உள்ளபடியாக தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 195.88 மில்லியன் ஆகும். | நிதிப்பிரமாணம் 373 இன் பிராகரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 2008, 2011, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதிகள் முறையே ரூபா 2.81 மில்லியன், ரூபா 2.65 மில்லியன், ரூபா 3.46 மில்லியன் மற்றும் ரூபா 9.18 மில்லியன் மீளாய்வாண்டினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யும் பணிகள் துரிதமாக்கப்பட வேண்டும். | தீர்ப்பனவு செய்வதற்கான பணிகள் எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நி.பி. 94(1) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட செலவின் அளவு மற்றும் பொறுப்புகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆண்டிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தின் அளவினை விஞ்சக்கூடாது என குறிப்பிடடப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டினுள் இலங்கை இராணுவத்தின் 03 செலவின விடயங்களுக்குரிய ரூபா 30.09 மில்லியனான சேமிப்புகளை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | நி.பி. 94(1) இன் பிரகாரம் ஆண்டிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தின் அளவினை விஞ்சி பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படக்கூடாது. | முன்கொண்டுவரப்பட்ட பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடு போதுமானதாக இல்லாதிருந்தமை இதற்கு காரணமாக அமைந்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

**2.4 ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 44 செயற்திட்டப் பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஏனைய அமைச்சுகள் மற்றும் 07 திணைக்களங்களால் ரூபா 864.02 மில்லியனான தெகை 2019 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் செலவிடப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் அளவானது ரூபா 672.45 மில்லியன் ஆகும். அவற்றுள் ரூபா 191.57 மில்லியன் அல்லது நிதியேற்பாட்டின் 22 சதவீதமானது செலவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், எதிர்பார்க்கப்பட்ட 44 பணிகளில் 12 பணிகளும் நிதயேற்பாடு செய்யப்பட்ட பணத்தில் எதனையும் பயன்படுத்தியிருக்கவில்லை. | கையளிக்கப்பட்ட பணிகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு உரிய திட்டங்கள் நால அடிப்படையில் நடைமுறைப்படுத்தல் மற்றும் பின்தொடர்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான குறித்த பணிகளை நிறைவேற்றுவதிலான செயன்முன்னேற்றம் 78 சதவீதமாக காணப்பட்டது. |

**2.5 முற்பணங்களை விடுவித்தல் மற்றும் தீர்த்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் ரூபா 62.87 மில்லியன் தொகையான நிலுவை மீதிகள் 01 முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்ட போதிலும், அந்த கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின 4 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்படல். | நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்பட்டவாறு காணப்படுகின்றது. |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம், வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 02 வருடங்களை கடந்த வைப்புகளை அரச வருமானத்திற்கு செலவு வைத்தல் அல்லது மீள செலுத்த வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 2 வருடங்களை கடந்த ரூபா 1.10 மில்லியனான வைப்புக்கள் தொடர்பில் அவ்விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

பனாகொடையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் 01 ஆவது படையணியின் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உலர் உணவுக் களஞ்சியத்தினை பரிசோதித்த போது உலர்ந்த மற்றும் குளிர்ச்சியான இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய ரூபா 102.02 மில்லியன் பெறுமதியான 11 உருப்படிகள் முழுமையாக அடைக்கப்பட்ட அதிக வெப்பநிலையுள்ள களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | உணவுப் பொருட்களின் தரம் பாதுகாக்கப்படும் வகையில் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரையிலும் எவ்வித பிரச்சினையும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதுடன், களஞ்சியத்தினை குளிரூட்டப்பட்ட களஞ்சியமாக மாற்றுவதற்குள்ள இயலுமை தொடர்பில் கவனம் செலுத்துவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2020 பெப்ரவரி 19 ஆந் திகதியில் உள்ளபடியான இயந்திய போக்குவரத்து I களஞ்சியத்தில் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியினுள் கிடைத்திருந்த ரூபா 4.25 மில்லியன் கூட்டுப் பெறுமதியுடைய 188 உருப்படிகளின் 2,489 அலகுகள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த தேவை சரியாக இனங்காணப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த இயந்திர போக்குவரத்து உதிரிப்பாகங்களுக்கு உரிய வாகனங்கள் பாவனையிலிருந்து அகற்றப்படல் மற்றும் அந்த உதிரிப்பாகங்கள் காணப்படும் வாகனங்களுக்கு பொருந்தாமை ஆகியன இதற்கு காரணமாக அமைந்திருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 பெப்ரவரி 19 ஆந் திகதியில் உள்ளபயொன இயந்திர போக்குவரத்து II களஞ்சியத்தினுள் ரூபா 0.63 மில்லியன் கூட்டுப் பெறுமதியுடைய 74 மின்கலங்கள் காணப்பட்டதுடன், அவற்றுள் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 0.41 மில்லியனான 56 மின்கலங்களின் ஆயட்காலம் நிறைவடைந்து பயன்படுத்த முடியாத நிலைக்கு உட்படுத்தபட்டிருந்தது. | வருடாந்த தேவை சரியாக இனங்காணப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மற்றுமொரு களஞ்சியத்திலிருந்து இந்தக் களஞ்சியத்திற்கு மின்கலன்கள் கிடைத்ததாகவும், அவ்வாற கிடைக்கும் போது உத்தரவாதக் காலம் நிறைவடைய இருந்ததாகவும், தற்போது காலவதியாகியுள்ளமையால் இந்த மின்கலங்களை விநியோகிக்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இயந்திரப் போக்குவரத்து பிரிவிற்கு கிடைத்திருந்த ரூபா 3.20 மில்லியன் பெறுமதியான டயர், ரியுப் மற்றும் அதற்குரிய 22 சொத்து வகைகளுக்குரிய 329 அலகுகள் விநியோகிக்கப்படாதிருந்தன. | வருடாந்த தேவை சரியாக இனங்காணப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த உதிரிப்பாகங்களுக்குரிய வாகனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரம் காணப்படுவதால் இந்த உதிரிப்பாகங்களின் இருப்பானது எஞ்சியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (உ) | ஐக்கிய நாடுகளின் சமாசான கடமைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 0.85 மில்லியன் பெறுமதியான எல் வடிவ இரும்பின் இருப்பொன்று 2018 நவம்பர் 22 ஆந் திகதி விநியோக போக்குவரத்து II களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததுடன், அவை களஞ்சியப் பகுதியின் திறந்தவெளியில் குவிக்கப்பட்டிருந்ததுடன், பெரும்பாலானவை துறுப்பிடித்திருந்தன. | சரியான தேவைப்பாட்டின் பிரகாரம் கொள்வனவு செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த இரும்பின் நீளத்தின் பிரகாரம், களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்த முடியாதிருந்ததாகவும், இது வரையிலும் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| இலங்கை இராணுவத்தின் 2019 ஆம் ஆண்டினுள் நட்டத்தினை அறவீடு செய்தல், பதிவழித்தல் மற்றும் | புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு அல்லது அறவீடு செய்யும் | துரிதமாக குறித்த தீர்ப்பனவு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| விட்டுவிடுதல் சம்பவங்கள் 120 காணப்பட்டதுடன், அவற்றின் பெறுமதி ரூபா 47.11 மில்லியனாகும். 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுதல் சம்பவங்கள் 172 காணப்பட்டதுடன், அவற்றின் பெறுமதி ரூபா 14,368.75 மில்லியன் ஆகும். இவற்றுள் 72 சம்பங்களுக்குரிய 10 வருடங்களை விஞ்சிய ரூபா 675.68 மில்லியன் தொகையும், 38 சம்பவங்களுக்குரிய 5-10 வருடங்களுக்குட்பட்ட ரூபா 77.37 மில்லியன் பெறுமதியும், 62 சம்பவங்களுக்குரிய 05 வருடங்களை விட குறைவான பெறுமதி ரூபா 13,165.70 மில்லியனும் ஆகும்.<br><br>மேலும், 2016 ஆம் ஆண்டின் போது இலங்கை இராணுவத்தின் சாலாவ முகாமில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் ஏற்பட்ட நட்டம் ரூபா 12,829.23 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றுள் அரச சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 12,817.76 மில்லியன் ஆகும். அது தொடர்ந்தும் பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்க உள்ள நட்டங்களினுள் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறையை துரிதப்படுத்துவதற்கு உரிய தேவைப்பாடு சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது.. | |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| 4.1 | இலங்கை இராணுவத்தின் நிரந்தரப் படையணியில் மற்றும் தன்னார்வ படையணியின் பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு. | காலத்திற்கு பொருந்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தியமைத்தல் | கருத்து வெளியிடப்பட்டிருக்கவில்லை. |

| விபரம் | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிரந்தரப் படையணி | உத்தியோகத்தர்கள் | 7,760 | 7,132 | 628 |
| | ஏனைய பதவிகள் | 119,704 | 101,053 | 18,651 |
| தன்னார்வ படையணி | உத்தியோகத்தர்கள் | 2,899 | 2,050 | 849 |
| | ஏனைய பதவிகள் | 70,149 | 56,012 | 14,137 |
| மொத்தம் | உத்தியோகத்தர்கள் | **10,659** | **9,182** | **1,477** |
| | ஏனைய பதவிகள் | **189,853** | **157,065** | **32,788** |

அல்லது பதவியணியை பொருத்தமானவாறு இணைத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்தல்.

**4.2** இலங்கை இராணுவத்தில் பணியாற்றும் சிவில் பதவியணி தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறு ஆகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | - | - | - |
| மூன்றாம் நிலை | 19 | 11 | 8 |
| இரண்டாம் நிலை | 204 | 146 | 58 |
| ஆரம்ப நிலை | 9,575 | 9,963 | 960 |
| அமைய/ ஒப்பந்த | 1,348 | | |
| **மொத்தம்** | **11,146** | **10,120** | **1,026** |

காலத்திற்கு பொருந்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தியமைத்தல் அல்லது பதவியணியை பொருத்தமானவாறு இணைத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்தல்.

கருத்து வெளியிடப்பட்டிருக்கவில்லை.